விலை ரூ. 5.00 பக்கங்கள் எட்டு **Registered as a News paper in Sri Lanka**




# வலம்புரி
# VALAMPURI

சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 29 ஞாயிற்றுக்கிழமை (13.01.2002) தொலைபேசி 3378 ஒலி 25

### நோர்வேத் தூதுக் குழு 16ந் திகதி பாலாவுடன் சந்திப்பு

# அரசு – புலிகள் சமாதானப் பேச்சு நேபாளத்தின் காத்மண்டுவில் !

### நிரந்தர யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடவும் ஏற்பாடு

(நமது விசேட நிருபர்)

**இனப்பிரச்சினை தொடர்பாக அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.**

**சமாதானப் பேச்சுவார்த்தை காத்மண்டுவில் நடத்துவதற்கு விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இதற்கான முயற்சியில் இலங்கை அரசும் நோர்வேயும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலலப் புலிகளிற்கும் இடையே இடம் பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை இந்தியாவில் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்த போதிலும் அதற்கு இந்திய அரசு இணங்கிக் கொள்ள[illegible]தை அடுத்து அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்களை பதினோராவது சாரக் மகாநாடு நடந்த நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடத்துவதற்கு தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் பேச்சை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்ததை

(8ஆம் பக்கம் பார்க்க)

### மேஜர் சோபியாவின் 12வது ஆண்டு நினைவு நிகழ்வில் தலைவர் "பிரபா" பங்கு பற்றினார்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியின் முதல் தளபதி மேஜர் சோபியாவின் 12வது நினைவு தின நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்ற போது அதில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேரில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளார். வன்னிப் பெருநிலப்பரப்பில் பெயர் குறிப்பிடப்படாத இடம் ஒன்றில் மேஜர் சோபியாவின் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது இந் நிகழ்வில் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டிருந்த சோபியாவின் உருவபடத்திற்கு ஈகைச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அக வணக்கத்தை செலுத்தினார். இதன் பின் விடுதலைப் புலிப் போராளிகளின் கலை நிகழ்வு இடம் பெற்றன (வ)

### அமைச்சர் டாக்டர் ஜயலத் இன்று யாழ் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்னா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றார்.

அமைச்சருடன் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நுர்டீன் மசூரும் யாழ் வருகிறார். இன்று வரும் இரு அமைச்சர்களுடனும் பத்திரிகையாளர்களும் கொழும்பில் உள்ள தனியார் தொலைக்காட்சி ஒளி பரப்பாளர்களும் வருகின்றனர். இன்று காலை வரும் அமைச்சர் ஜயலத் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனை சந்திப்பார். அதனைத் தொடர்ந்து காலை 10.30 மணிக்கு செயலகத்தில் திணைக்கள உயர் அதிகாரிகளை சந்திக்க உள்ளார். நண்பகல் 12.00 மணிக்கு தகவல் தொழில் நுட்ப பூங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இதனை அடுத்து சிறி நாகவிகாரை, யும்மாப் பள்ளி வாசல், ஊர்காவற்துறை சின்னமடு ஆகிய இடங்களுக்குச் சென்ற பின் இரவு யாழ் ஆயரைச் சந்திப்பார்.

### வவுனியாவுக்குள் வருவோருக்கு

# சமாதானத்தை குழப்புவோரை கூண்டோடு அழித்து விடுவேன்

### பிரதமர் ரணில் ஆவேச உரை



(கொழும்பு)

நாட்டில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி சாந்தி சமாதானத்தை உரு[illegible] பணி என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 47வது பேராளர் மாநாடு நேற்று கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் உரையாற்றும் போதே ரணில் [illegible] அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கியணண வாக்குறுதிகளை நிறை வேற்றுவது எனது முக்கியமான பணி இதில் நாட்டில் சாந்தி சமாதானத்தை ஏற்படுத்துவேன்

இன்று காலை வரும் அமைச்சர் இரவு யாழ் ஆயரைச் சந்திப்பார்.



சாந்தி சமாதா னத்தை உரு வாக்குவதேதன து தலை யாய

கொழும்பு மாநகர சபை மண்டபத தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் உரையாற்றும் போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிறை வேற்றுவது எனது முக்கிய மான பணி இதில் நாட்டில் சாந்தி சமாதா னத்தை ஏற்படுத்துவேன்

(8ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவுக்குள் வருவோருக்கு 48 மணி நேரத்திற்குள் வதிவிட அனுமதிப் பத்திரம்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் இருந்து வவுனியா வரவிருக்கும் பயணிகளுக்கு பிரமணாளங் குளத்தில் வைத்து வதிவிட அனுமதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இந்த வதிவிட அனுமதிப்பத்திரம் சுமார் 10 தினங்களுக்கு செல்லுபடியாகும். வன்னியிலிருந்து வவுனியா வரும் பயணிகளுக்கு வவுனியாவில் உள்ள "சனச" தற்காலிக இடைத்தங்கல் முகாமில் வைத்து 48 மணி நேரத்திற்குள் எந்த விதபிணையும் இன்றி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

இதே வேளை வவுனியாவிற்கும் பிரமணாளங்குளத்திற்கும் இடையில் வாரத்தில் சனி ஞாயிறு தவிர்ந்த 5 நாட்களுக்கு பஸ் சேவை நடத்தப்படவுள்ளதுடன் 600 பேர் பயணஞ் செய்யவும் அனுமதிக்கப்படுவர் (வ)

## க.பொ.த உயர்தர பரீட்சை ஏப்ரல் 22ல் ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஏப்ரல் மாதம் 2ந் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது எனவும் ஏப்ரல் 22ந் திகதியே பரீட்சை ஆரம்பமாகும் என்றும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதே வேளை ஏற்கனவே தயாரித்த நேர சூசி திகதி மாற்றங்களுடன் செல்லுபடியாகுமெனவும் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## புலிகளின் ஆயுத முகவர் கே. பி நியூசிலாந்தில் தங்கியுள்ளார்?

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆயுத முகவர் கே. பி. பத்மநாதன் தாய்லாந்தில் இருந்து நியூசிலாந்திற்கு வந்துள்ளதாக அங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. நியூசிலாந்து புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி அப்பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

நியூசிலாந்தின் முன்னணி வர்த்தக நிறுவனங்கள் பல விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நிதி உட்பட ஆயுத உபகரணங்களையும் வழங்கி வந்துள்ளது. இந் நிறுவனங்களுடன் பேச்சுக்களை நடத்தவே கே.பி வந்ததாகவும் அவருடைய வருகை தொடர்பான தகவல்கள் மிகவும் இரகசியமாக உள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மீது இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலை அடுத்து அந் நாட்டின் அழுத்தத்திற்கு அமைய நியூசிலாந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வரவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## விலையேற்றத்தை தடுக்காவிடில் விரைவில் வெகுஜனப் போராட்டம்

### புளொட் அமைப்பு அரச அதிபருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் தற்போது காணப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் எரிபொருள்களின் விலையேற்றம் குறித்தும் அது தொடர்பாகவும் தாம் எடுக்கவுள்ள நடவடிக்கை குறித்தும் புளொட் அமைப்பு யாழ் அரச அதிபர் கே. சண்முகநாதனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ் குடாநாட்டில் தற்போது காணப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் எரிபொருள் விலையேற்றம் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக அதிகரித்து சென்றுகொண்டிருப்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். ஆயினும தாங்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர் இந்தியாவில் விடுதலை

(கொழும்பு)

இந்திய கொச்சின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு இலங்கை மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். கடந்த 2 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் விடுதலை செய்ய 5000 இந்திய ரூபாவினை பிணையாக செலுத்த வேண்டியிருந்ததாக தேசிய மீனவர் ஒருமைப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

சிறந்த ஆசிரியர்கள் மூலம் விசேடசித்தி பெற ஆண்டு 10,11 மாணவர்க்கான ஆங்கிலம், வர்த்தகம், கணிதம் மாலை வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளது தொடர்பு:426 (302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்' (4205)

### வகுப்புக்கள்

ஆண்டு6இல் இருந்து ஆண்டு 11வரை முக்கிய பாடங்கள் பயிற்சி கொடுக்கப் படுகிறது. சிறந்த ஆசிரியர்கள் மூலம் 426(302)காங்கேசன்துறை விதி, யாழ்ப்பாணம்.
**Spoken English** வகுப்புக்களும் நடைபெறுகின்றது. (கி-3261)

### வெளியீடுகள்

தைமாத ராகுகேதுமாற்றம் ரூபா12 எங்கும்விற்பனையாகின்றது, சத்தியா ஆனைக்கோட்டை (ஜீவன்-பிரம்மம் ஐக்கியவேதாந்தரக சியம்-நூல் அறிமுகம் அடங்கியது) கிடைக்குமிடம் சிவசம்பு களஞ்சியம் 3,மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்' (4216)

### தேவை

சகல வேலைகளும் செய்யக்கூடிய கொம்போசிற்றர் தேவை பெண்பிள்ளை விரும்பத்தக்கது. நேரில் தொடர்புகொள்ளவும். சரவணா அச்சகம் 233,ஆஸ்பத்திரி வீதி, (சத்திரச் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (C-3367)

## ஜயலத்துக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவின் யாழ்ப்பாண வருகையை வரவேற்றும் அவரின் விஜயத்தின் போது இங்குஊன்றிக்கவனிக்கப்படவேண்டிய விடயங்களைச் சுட்டுக்காட்டியும் அகில இலங்கைத் தமிழ்க்-காங்கிரஸ் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர் எஸ் ஐங்கரன் அமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். (உ)

## திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலில் இன்று காலை 6.30மணிமுதல் சிவ.சண்முகவடிவேல் தலைமையில் திருவாசகம் முற்றோதல் இடம் பெறவுள்ளது.

நிகழ்வை பிரம்மஸ்ரீ ச.சண்முகநாதக் குருக்கள் ஆரம்பித்து வைப்பார். (உ

## பெண் நிருபர்கள்

மகளிர் அபிவிருத்தி நிலையமும் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிய (யூ. என். எச். சீ. ஆர்) நிறுவனமும் இணைந்து நடத்தவுள்ள அனைத்துலக மகளிர் தினத்தையொட்டிய நிகழ்வாக (மார்ச் 8ம் திகதி) பெண் பத்திரிகை நிருபர்களை இனங்காணும் பணி இடம்பெறவுள்ளது.

பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி செய்திகள் சேகரித்துப் பத்திரிகைக்கு வழங்க வல்ல பெண் நிருபர்கள் இப்பணிக்குத்தேவைப்படுகின்றனர்.

ஆர்வமுள்ளோர் 19, அரசடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் 17-01-2002 வியாழக்கிழமை அன்று பி. ப. 2.00 மணிக்கு இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பங்கு கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

(4215)

### சமாதானப் பேச்சுக்கான தளமாக

# தமிழ்நாடு இருப்பதை விரும்பாவிடின் வேறோர் இடத்தை அறிவிக்க வேண்டும்

## இந்திய அரசுக்கு அமைச்சர் சந்திரசேகரன் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தையும் நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையையும் சீரழித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரும்முயற்சி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற போது தமிழ் நாட்டை பேச்சுவார்த்தையின்தளமாக பயன்படுத்துவதை புலிகள் விரும்புவதாக அறியமுடிகிறது.

தமிழ்நாட்டை அல்லது புதுவையை பயன்படுத்துவது. இந்தியாவிற்கு ஏதாவது பின் விளைவுகளை ஏற்படுத்தும் என இந்தியா கருதினால் இப்பேச்சுவார்த்தைக்கு பொருத்தமான இடத்தை இந்தியா அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு கோரி தோட்ட உட் கட்டமைப்பு அமைச்சர் சந்திரசேகரன்இந்திய உயர்ஸ்தானிகர் கோபாலகிருஷ்ண காந்திஊடாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சமாதானப் பேச்சுவார்த்தையில் சாதகமான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் புலிகள், இம் முயற்சிக்கு இந்தியாவின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளனர்.

இந்தியாவின் சர்வதேச கொள்கையில் இலங்கையின் இனப்பிரச்சினையைப் புறக்கணிக்கமுடியாது.

அயல் நாடான இந்தியா, இப் பிரச்சினையை தம்மோடு சம்பந்தப்படாத விடயமாக ஒதுக்கமுடியாது.

இலங்கை மக்களின், குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு இந்தியா தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ-8)

## ஓய்வூதியர் சங்க அலுவலகம் திறப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம், வேலணை வங்களாவடிச் சந்தியில்அலுவலகம் ஒன்றினைத் திறந்துள்ளது.

ஓய்வூதியர்களின்நலன்கருதி அவர்களின் தேவைகளினை நிறைவேற்றுவதற்கு வசதியாகவே இவ் அலுவலகம் செயற்படத் தொடங்கியுள்ளதாக வேலணைப்பிரதேச ஓய்வூதியர் நலன்புரிச் சங்க வட்டாரங்கள் தெரிவுத்தன.

நயினாதீவு, புங்குடு தீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## அமைச்சர் வருகையை ஒட்டி அவசரமாக திருத்தப்படும் குடாநாட்டு வீதிகள்

(ஈச்சமோட்டை)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனாவின் யாழ். வருகையை முன்னிட்டு மாநகர, நகர சபைகளும், வீதி அபிவிருத்தி அதிகார சபையும் அவசர அவசரமாக வீதிகளை திருத்தும் பணியை முடுக்கி விட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள அமைச்சர் யாழ்ப்பாணத்தின் நிலைமைகளை நேரடியாகப் பார்வையிடவுள்ளமை தெரிந்ததே.

இவ்வளவு காலமும் மக்கள் எத்தனையோ புகார்கள், அறிவுறுத்தல்கள்வழங்கியபோதும் தமக்கு மேலிட உத்தரவு வரவில்லை, நிதி இல்லை, பாதுகாப்புச்சிக்கல், ஊழியர் போதாது என காரணம் காட்டி வீதி திருத்தும் பணிகளை வருடக்கணக்கில் இழுத்தடித்து வந்தவர்கள், இப்போது ஒரு சில நாட்களிலேயே வீதிகளை விரைவாக செப்பனிடும் பணிகளை மேற்கொள்வது மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. (உ-59)

## நைஜீரிய பஸ்வண்டி விபத்தில் 50 பேர் பலி

(லாகூஸ்)

நைஜீரியாவில் வடபகுதியில் பஸ்வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் 50 பேர் பலியாகியுள்ளனர்.

திருமண வீடொன்றுக்கு பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ்வண்டியும் லொறிஒன்றும் நேருக்குநேர்மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையில் லொறிச்சாரதி மது போதையில் இருந்தார் என்றும், பஸ்வண்டி லொறி செல்வதற்கு வழிவிட்டுக் கொடுத்தும் அது நேருக்குநேர் மோதியுள்ளது என்றும் தெரியவருகிறது.

இதேவேளை, லொறிச்சாரதி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (உ-7)

### விபத்தில் காயம்

(மந்திகை)

கடந்த வெள்ளிபன்று கரவெட்டி மூத்தவிநாயகர் கோவிலடிப் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், யாழ் பல்கலைக்கழகஇந்துநாகரிகத்துறைக் கட்டுரையாளரான உடுப்பிட்டியைச்சேர்ந்த இராசையாஅகிலன் (வயது 29)காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

### பத்திரிகையாளர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய்ப் பிரிவு நடத்திவரும் இலவச பத்திரிகையாளர் பயிற்சி நெறியில் யாழ். கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இன்று,

கலாநிதி க.குணராசா, திருமதி கோகிலா மகேந்திரன், ஆசிரியர் அ.குமாரவேல், சட்டத்தரணி வி.ரி. சிவலிங்கம் ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளதாக கோப்பாய் பிரிவுச் செயலாளர் இ. மயில்வாகனம் தெரித்தார். (உ)

### பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொங்கல்விழா நாளை பி.ப1.00மணிக்கு நீர்வேலி வடக்கு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ)

★ ★ ★

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றைப் பிரதேச செயலகத்தின் ஊழிபர் நலன் புரிச் சங்கம் நடத்தும் பொங்கல் விழா எதிர்வரும்16ஆம் திகதி புதன்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது. (உ.75)

## காய்ச்சலிற்கு ஆளான 35 பேர் கடந்த 6மாதங்களில் மரணம்

### வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் இருந்து இறுதிப் பகுதிவரையான காலத்தில், காய்ச்சல் நோய்காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 45பேரில் 35 பேர் மரணத்தைத் தழுவிக்கொண்டதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் அனேகர் செப்ரிசிமியா,டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் எனவும்,

இதற்கு அடிப்படைக் காரணியான நுளம்பினைக் கட்டுப்படுத்த சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் தவறுமிடத்து,இதன் தாக்கம் பூதாகரமாக உருவெடுக்கும் எனவும் வைத்திய நிபுணர்கள் தரப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தவிர,இந் நோய்களின் தாக்கம் கோப்பாய், இருபாலை, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் தீவிரமடைந்திருப்பதும் வைத்தியசாலை அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, காய்ச்சல் நோயாளர்களால் யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகள் பலவற்றில் மிகுந்த இடநெருக்கடி ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தின் பொங்கல்விழா நாளை பி.ப 7.00மணிக்கு நிலையக் கலையரங்கில் தலைவர் பொ. சிறீராஜ புலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி க.நவரத்தினமும்சிறப்புவிருந்தினராக யாழ்.மாநகரசபை உறுப்பினர் மு.தவநாதனும், கௌரவ விருந்தினராக கொட்டடி கிராம அலுவலர் அ.மகாலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## பேருந்து சேவையை அதிகரிக்குக

(துன்னாலை)

பருத்தித்துறையில் இருந்து கச்சேரிக்கான பேருந்து சேவையை அதிகரிக்கவேண்டுமென அப்பகுதி அரச அலுவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-41)

## ஆலயம் புனரமைப்பு

(துன்னாலை)

வடமராட்சி குஞ்சர் கடையடிப் பகுதியில் கடந்த ஆண்டு இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலால் சேதமடைந்த வைரவர் ஆலயப் புனரமைப்புப் பணிகள்தற்போது இடம்பெற்று வருகின்றன. (உ-41)

## 512 மிதி வெடிகள் மீட்பு

(கொழும்பு)

இவ்வருடத்தில் 4ஆம்திகதி தொடக்கம் 10ஆம்திகதிவரையான காலப்பகுதியில்ஆனைப் பந்தி, அளவெட்டி,கொக்குவில்,பெரியவிளான் ஆகிய இடங்களில் 512மிதிவெடிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ)

சோதிடபலன்

# உங்கள் பிறப்பு நட்சத்திரத்திற்குகந்ததான சுபவேளைகளைத் தெரிந்து செயற்படுங்கள்

## டாக்டர் எம். வி. ராமன்
சோதிடவித்தகர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

பூரம் நட்சத்திரம்

பூரநட்சத்திரம் 11 வது நட்சத்திரம். இதற்கு உரிய கிரகம் சுக்கிரன், இதிற் பிறந்தவர்களுக்கு எப்போதும் ரேவதி நட்சத்திரம் நன்மைக்குரியதாகும். தாராபலன் 8க்கு மைத்திரம் அதிபதி சுக்கிரன்- வாகனம் கருடன்' அதிபதி பலன் மகிழ்ச்சி வாகன பலன் சுகவிருத்தி, சந்திரன் பலன் 8க்கு, உங்களுக்கு தேய்பிறைதான் எப்போதும் சிறப்புத்தரக்கூடியது. பௌர்ணமி வந்த 8வது நாள் சிறப்புச் செயலுக்கு நன்மையளிக்கும், ரேவதி ஞாயிற்றுக்கிழமையில் வரும் நாள் அமிர்தயோகம் உதயமாகும். மகரிஷி வாக்கியத்தில் இந்த நாளுக்கு வர்த்தமானயோகம் வரும். இதன் பலன் அதிக இலாபம். எனவே, உங்கள் சுப முயற்சிகள் அனைத்தையும் இப்படிப்பட்ட நாளில் வைத்துக்கொள்ளலாம்கௌரி பஞ்சாங்க வேளை - காலை 6மணி முதல் 7 மணிக்குள் உத்தியோக வேளையில் சுக்கிரன் கால ஓரையில் எதைச் செய்தாலும் வெற்றிக்கு வழி வகுக்கும். கடைக்கால்போட புதிய தொழில் ஆரம்பம் செய்ய, கலைத்துறைபடம் ஆரம்பம் செய்யவும் வெற்றியாக அமையும். ரேவதி நட்சத்திரம் திங்கள் கிழமையில் வரும் நாள் சித்தயோகம் உதய மாகும். ஆனந்பாகம். தாதியோகத்தில் இந்த நாள் மாதங்கயோகம் உள்ள நாள். இது எந்த சுப காரியங்களுக்கும் விலக்க வேண்டும். இதே நாளில் பகல் 11 மணி முதல் 12 மணிக்குள் எந்தசுப காரியமும் செய்ய ஆரம்பிக்கவும் உத்தமம், இந்த நேரம் சுக்கிரன் ஓரை நடக்கும் காலம். திருமணசம்பந்தமாக பேச, கடிதம்எழுதவும். நன்மையான பலன்களைக் காணலாம். ரேவதி நட்சத்திரம் வியாழக் கிழமையில் வரும் நாள் சித்த யோகம் உதயமாகும் ஆனந்தாதி யோகத்தில், இது செதா யோகம் உள்ள நாள் இந்த எல்லா சுபங்களுக்கும் விலக்க வேண்டும். இதே நாளில் கௌரிபஞ்சாங்க காலம் காலை 6 மணி முதல்7 மணிக்குள்ளாக உத்தியோக வேளை குரு ஓரையில் எல்லா சுப காரியங்களும் செய்ய, முயற்சிக்க ஏற்றநாளாகும்.

பூரத்திற்கு வேதை (ஆகாத நட்சத்திரம்)பூராடம் திருமணம் செய்ய, தொழில் கூட்டுசேர்க்க, உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள -6 (ரச்சு) அவைகள்-பரணி பூசம்,பூரம், அனுஷம், பூராடம் ஆகியவைகள். அதிர்ஷ்ட மலர்-செந்தாமரை. அனுகூல தெய்வம்- சிவபெருமான், அதிர்ஷ்டகல்-வைரம், அதிர்ஷ்டநிறம்- வெண்நீலம், அதிர்ஷ்ட எண்-2,11,

உத்திரம் நட்சத்திரம்

இந்த நட்சத்திரம் 12 வது நட்சத்திரம். இது சூரியனுக்கு உரிய நட்சத்திரம். உங்களுக்கு அசுவினி நட்சத்திரம் எப்போதும் நன்மைக்குரிய நட்சத்திரமாகும். தாராபலன் 8 க்கு மைத்திரம்-அதிபதி சுக்கிரன். வாகனம் கருடன், அதிபதி பலன் உளளம், மகிழ்ச்சி, வாகனபலன் சுக விருத்தி, சந்திரன்பலன்முதல் பாதத்திற் பிறந்து சிம்மராசியை உடையவர்களுக்கு அமாவாசை கழிந்த 9 வது நாள் எல்லா சுபங்கள் செய்யவும் ஏற்ற நாள். நவமி திதி வரும் நாள் இது உத்தரநட்சத்திரம், 2 வது, 3 வது, 4வது பாதங்களில் பிறந்தவர்களுக்கு அமாவாசை கழிந்த எட்டாவது நாள் வளர்பிறை காலம், எல்லாவித சுபகாரியங்களுக்கும் ஏற்றவையாகும். இது மிகச் சிறப்பான நாள், உங்கள் இராசிகன்னி, வார நாட்களில்திங்கட்கிழமை அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள் அமிர்த யோகம் வரும், இந்த நாள் இராட்சச போக நாள் என்பதால் ஆகாத நாளே, மற்றும் இந்த நாளில் காலை 6 மணி முதல் 7 க்குள் எந்த சுபமும் செய்யலாம், இது 4 பாதங்களை உடையவர்களுக்கும் பொருந்தும், அச்சுவினி நட்சத்திரம் வியாழக் கிழமையில் வரும் நாள் அமிர்த யோகம் உதயமாகும். இந்த நாள் எல்லா சுபகாரியங்களுக்கும் ஏற்ற நாள், மற்றும் காலை 6 மணி முதல் 7 க்குள் எல்லா சுபகாரியங்களும் செய்யச்சிறப்பு, ரேவதி நட்சத்திரம் வெள்ளிககிழமையில் வரும் நாள் அமிர்த யோகம் உதயமாகும், இது ஸ்ரீவர்ச்சயோக நாள், எல்லா வித சுபகாரியங்களும் செய்யலாம், இது நான்கு பாதங்களுக்கும் பொருந்தும்,

உத்தரம் நட்சத்திரத்திற்கு வேதை (ஆகாதநட்சத்திரம்)- உத்தரட்டாதி, திருமணம் செய்ய, தொழில் கூட்டு சேர்க்க ஆகாத நட்சத்திரங்கள் 6 (ரச்சு) அவைகள்கார்த்திகை, புனர்பூசம், உத்தரம், விசாகம், உத்தராடம், பூரட்டாதி ஆகியவைகள். அதிர்ஷ்டமலர், செந்தாமரை, அனுகூல தெய்வம்- இலட்சுமி, அதிர்ஷ்டக்கல்- வைரம், அதிர்ஷ்டநிறம் சிறப்பு, அதிர்ஷ்டஎண்: 3,12.

(தொடரும்)

# மனமொன்றிய பக்தியும், மக்கள் சேவையுமே வீரத்துறவி விவேகானந்தரின் வேண்டுகோள்

## ஜி. நக்கீரன்

மனிதத்தன்மையே சமயத்தின் ஊற்று

மனிதநாகரிக வளர்ச்சிப் படிகளில், காட்டுமிராண்டித் தனமான வாழ்க்கை நடத்திய மனிதனுக்குதமக்கு ஒரு பொதுவான ஒழுங்குமுறை பேண, வேண்டியதன் அவசியம் ஏற்பட்டநிலையில், தமக்கு மேலான ஒரு சக்தியை நம்பினான், அந்த சக்தியின் பேராலே தமது வாழ்வுமுறையில் சில ஒழுங்கு முறைகளைப் பேணினான். இவ்வாறு மனித இனம் தங்களது வாழ்க்கை முறையில் ஒரு ஒழுங்கான தன்மையைபேணி வரைமுறையான வாழ்வு வாழ்வதன் பொருட்டு தான் சமய வரைமுறைகள் உருவாகின. உண்மையில் சமயம் அல்லது மதம் என்பது ஒருவனது வாழ்வில் நிம்மதியையும் சாந்தியையும் தரவல்ல நடைமுறைகளைதரவல்லதே. எமது இந்து சமயத்தில் இந்த வரைமுறையான வாழ்வியல் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம் சன்னியாசம் எனும் நாலு ஆச்சிரம தர்மங்களை கடைப் பிடித்து வாழுபவன் இறுதியில் இறைநிலை அல்லது முக்தி அடைவான் என்று கூறுகிறது. இறைவன் என்பவன், ஒரு பொதுமையானவன் அவன் தான், அண்டசராசரங்களின் ஆட்சிபீடம், அவன் அனைத்துக்கும் மேலான பரம்பொருள் - அவனின் திருவிளையாடலே, இப்பிரபஞ்சமும், பூகோளமும், உயிரினங்களும். அவன் எல்லையற்றவன், காலங்களுக்கும் நேரங்களுக்கும்அப்பாற்பட்டவன். அவனுக்கு சமயங்களும் இல்லை மதங்களும் மத இணைப்பாளர்களும் இல்லை. ஆனால் சமயங்கள் என்பவை இந்தமேலான பரம்பொருளின்திருவருளைப் பெற்று மானிடவாழ்வின் உய்விற்கான நடைமுறை வாழ்க்கை ஒழுங்குகளை தருவனவே. இதையே மகான்கள் பல்வேறு நதிகளும் ஒரு கடலிலேயே சங்கமிக்கின்றன போன்ற இன்னோரன்ன உதாரணங்கள் மூலம் விளக்குகின்றனர்.

மனம் ஒன்றாதசடங்குகள

உண்மையில் சமயச்சடங்குகளும், கிரியைகளும் ஆன்மாவுடன் இணைந்ததாகவே இருக்கின்றன. வெறும் உடலால் மட்டும் செய்யப்படுவது கிரியையே அல்ல. சமயச் சடங்குகளில் அனேகமானவை மனத்தில் பாவம் பண்ணுவதாகவே உள்ளன. மனம் ஒன்றாத சடங்குகளும், காரணம் தெரியாத சடங்குகளும் வெறும் கடமைக்குச் செய்யும் செயல்களே. எப்படி இருக்கும் என்றால் கடமைக்கு படிக்கும் மாணவனுக்கும், கருத்தூன்றி அக்கறையுடன் படிக்கும் மாணவனுக்கும் உள்ளவேறுபாடே. எனவே சமயங்கள் மக்களின் வீடு பேற்றுக்கும், முத்திக்கும் சித்திக்கும் வழிகாட்டுவனவாகவே அமையவேண்டும்.

அடிப்படை பக்தி

சமயத்தின் அடிப்படை பக்தி இறைவன் மேல், என்னை விட உயர்ந்த மேலான சக்தி மேல் கொண்டுள்ள அன்பின் வடிவமாற்றமேபக்திபக்தியின் வெளிப்பாடு அன்பு. உயிர்கள் மேல்அன்பு, ஜீவராசிகளின் மேல்அன்பு, பிறமனிதன் மீது அன்பு, எதிலும் அன்புஎங்கும் அன்பு. இறுதியில் அன்பே வடிவானவன் ஆவதே பக்தி உள்ளவனின், சமயவாதியின் தன்மை. மற்றவனை என்னைப்போல்நேசித்தல், அவன் துன்பத்தை என் துன்பமாக கருதி அவனுக்கு சேவை செய்தல் இவ்வாறு உள்ள பக்தியின் இறுதி நிலை ஆன்மாவை உணர்தல், 'ஆன்மா', என்றும் நிலையானது. எல்லா உயிர்களிடத்தும்இருப்பது ஒருஆன்மாவேஒருநீர்வெவ் வேறுபாத்திரங்களில்இருக்கும்போது அவற்றின் வடிவம் வேறாயினும் மீண்டும் வெளியேறியவுடன் அதேநீராகிறது. ஆன்மாவும் இவ்வண்ணமேஎன்பதைஉணர்வதேபக்தியின் உயர்நிலை.

இந்த ஆன்ம உணர்வை அனைவரையும் பெறவைப்பதற்காகவேசுவாமி விவேகானந்தர்தன்ஆயுள்முழுவதும்பணியாற்றினார். சமயங்களைக் கடந்து, இனம், மொழிகளைக் கடந்து எல்லோரும் ஆன்ம ஈடேற்றம் பெற வேண்டும் என்பதற்காக அவர் செய்ததியாகங்கள் அளப்பெரியன.

அவர் இந்து மத மறுமலர்ச்சிக்காக, இந்துமத எழுச்சிக்காக இளைய தலைமுறையையேநாடினார். ஒவ்வொரு இந்துவும் தன் சமயத்தில் மிகுந்தஈடுபாட்டுடன் இருக்க வேண்டும் என்று முழக்கமிட்டார். சுவாமிவிவேகானந்தர் ஒரு மதவாதி அல்லர். அவர் சமயங்களிடையேசமரசம் செய்தவர். ஒருவன் தான் பிறந்தசமயத்தைப் பின்பற்றுதலே நாகரிகம் என்றார் ஆனால் ஓர் இந்துவைமற்ற சமயங்களுக்கு மாற்றுவதை வன்மையாகக் கண்டித்தார்.

இன்று எம் சமூகம் அன்று விவேகானந்தர் வாழ்ந்த ஒரு சூழ்நிலையைக் கொண்டதாகவே உள்ளது. இன்றும் எமது சமயத்தில் ஏராளமான பிற்போக்குகள் இருப்பதாகவே படுகிறது. இவை அனைத்தும் களையப்பட்டு, ஒரு மறுமலர்ச்சியுள்ள, புத்துயிர்பெற்ற சமயமாகஎமதுசமயத்தை மாற்ற

இளைஞர்கள் எல்லாம் மீண்டும் ஒருமுறை ஒன்றிணைவோம். சமூகசேவைகள், பண்பாடு, கலாசாரம், சுதேசம் ஆகியவற்றை பேணி வாழ்தலே நாம்வீரத்துறவி சுவாமி விவேகானந்தருக்கு செய்யும் சேவையாகும்.

# யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் வசதிகளை மேம்படுத்த விபரங்களைத்திரட்ட நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டு வரும் யுத்தம் காரணமாக பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பது தொடர்பாக தேசிய அளவில்கணிப்பொன்றை மேற்கொள்ளப் போவதாக புனர்வாழ்வு மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜயவர்த்தனாதெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கருத்து வெளியிடும் பொழுதில் அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துவாழும் மக்களுக்கு அரசாங்கம் அதிகளவு உதவி வழங்க உறுதிபூண்டுள்ளதாகவும், கணிப்பீடொன்றை மேற்கொள்வதன் மூலம் நிவசரணப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் எனவும்,

கடல்கடந்து தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் கோரி வாழும் மக்களும் இக் கணிப்பீட்டில் உள்ளடங்குவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# மேலதிக பயிற்சி

(மானிப்பாய்)

ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் நடத்தப்படும் மின்னிணைப்பு பயிற்சியில் சான்றிதழ் பெற்றவர்கள் மேலதிக பயிற்சி நெறி ஒன்றினைத் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பெறுவதற்கு விரும்பினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள கிராமிய தொழிற் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் போதனாசிரியர் அறிவித்துள்ளார். (உ-120)

# சிறுப்பிட்டி, புத்தூர் ஆயுர்வேத வைத்திய நிலையங்கள் பூட்டு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்கிழக்கு பிரதேச சபையினால் சிறுப்பிட்டி, புத்தூர்ப் பகுதிகளில் இயக்கப்பட்டு வந்த ஆயுர்வேத வைத்திய நிலையங்கள் தற்போது பூட்டப்பட்டுள்ளன.

இதனால் இவ் வைத்திய நிலையங்களினூடாக நல்ல வைத்திய சேவைகளைப் பெற்று வந்த மக்கள்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை, அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய்ப்பகுதி ஆயுர்வேதவைத்திய நிலையங்கள் தொடர்ந்தும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (க)

## இடம் பெயர்ந்தோர் முகாம்கள் பாராமுகம்

# வடமராட்சிப் பகுதியில் தொற்று நோய்

# தாக்கம் நாளுக்கு நாள் அதிகரிப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் வயிற்றோட்டம் மற்றும்மலேரியாக் காய்ச்சலின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருவது வைத்தியசாலை புள்ளி விபரங்கள் மூலம் அறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்து வந்த மழை காரணமாக முகாம்களிலுள்ள கிணறுகள் மற்றும் மலசல கூடங்கள் நிரம்பி வழிவதுடன், குளம் குட்டைகளும் நிரம்பியுள்ளமையே இவ்வாறான தொற்று நோய் பரவக் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வகையில், தற்போது பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சுமார் 50 பேர் மலேரியா நோய்க்குத் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதுடன்,

15 சிறுவர் வயிற்றோட்டம் காரணமாக விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தவிரவும், பெரும் எண்ணிக்கையானோர் மேற்கண்ட நோய்களுக்கு வைத்தியசாலையின் வெளிநோயாளர்பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதுடன்,

வேறுபலர் மற்றைய அரச வைத்தியசாலைகளிலும், தனியார் வைத்திய நிலையங்களிலும் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது.

இந்நோய்கள் தவிர சரும நோய்கள் பலவும் இப்பகுதியில் தீவிரமாகப்பரவிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இத்தொற்று நோய் அபாயத்தைத் தடுத்து நிறுத்தி மக்களை அழிவில் இருந்து காக்கும் நடவடிக்கைகளில் இப்பகுதிச் சுகாதாரப் பரிசோதகர்கள் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்தும் அறிவுறுத்தல்களையும் வழங்கி வருகின்ற போதிலும், அவை உரிய வகையில் சம்பந்தப்பட்ட மக்களைச்சென்றடையவில்லை என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. (உ-23)

## மண்ணெண்ணெய்

## விநியோகத்தில் குளறுபடி

## பொதுமக்கள் ஆவேசம்

(காரைநகர்)

மண்ணெண்ணெய்விநியோகத்தில் ப.நோ.கூ.சங்க முகாமையாளர் புரிந்த குளறுபடியால் ஆத்திரமுற்ற பொதுமக்கள், அவரைத் தாக்க முற்பட்ட சம்பவம் அண்மையில் காரைநகர் களபூமி பகுதியில் இடம் பெற்றது.

சம்பந்தப்பட்ட பகுதி பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு 5லீற்றர் மண்ணெண்ணெயை விநியோகிக்கு மாறு தலைமை அலுவலகம் பணித்த போதும், அதனைப் புறக்கணித்து, தனக்கு வேண்டிய வேறு பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தாலேயே பாதிப்புற்ற மக்கள் கோபமுற்ற நிலையில் முகாமையாளரைத் தாக்க முற்பட்டதாய் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தையடுத்து, ஒருநாள் மேற்படி சங்கக் கிளை செயலிழந்ததாகவும் தெரியவருகிறது.

(உ-238)

## செய்தியாளர்களை

## நான்கு வகைப்படுத்தி

## அ. அ. வழங்க திட்டம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல ஊடகங்களினதும் செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும்முறையை ஊடகத் தொடர்பாடல் அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களின் வேண்டு கோளுக்கிணங்கவே அரசாங்கத்தின் தகவல் பணிப்பாளரினால் இவை வழங்கப்படவுள்ளன.

உள்நாட்டு செய்தியாளர்களுக்கு வேறாகவும், வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு வேறாகவும், பிராந்திய செய்தியாளர்களுக்கு வேறாகவும் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான செய்தியாளர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய விசேட அடையாள அட்டையுமாக 4 விதத்தில் வழங்கப்படவுள்ளன.

நால்வகை செய்தியாளர்களுக்கும் 4வகை நிறங்களில் இவை வழங்கப்படவுள்ளன.

(உ-8)

## வைத்தியசாலை

## மலசல கூடம் பழுது

## நிர்வாகம் பாராமுகம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் 7 ஆம் இலக்க விடுதிக்குரிய மலசலகூடம் பழுதடைந்தததன் காரணமாக அதில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

கடந்த இரு வாரங்களாக இந்நிலை தொடர்கின்ற போதிலும் வைத்தியசாலை நிர்வாகம் இது விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-23)

### தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்

## முதியோர் அ. அட்டை

## வழங்க நடவடிக்கை

(ஏழாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் வயதுமுதிர்ந்தோருக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

65 வயதுக்கு மேற்பட்ட முதியோர் தத்தமது கிராம அலுவலர் ஊடாக இவ் அடையாளஅட்டைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், மேலதிக விபரங்களை கிராம அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அடையாள அட்டையை பெறுவதன் மூலம் வைத்திய சேவை, போக்குவரத்துச் சேவை, வங்கிச் சேவை, தபால்சேவை போன்றவற்றில் பல சலுகைகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-12)

## ஆசிரிய நூலகர்களாக

## வடக்கு-கிழக்கில்

## 568 ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 568 ஆசிரியர்கள் ஆசிரிய நூலகர்களாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் ஏற்கனவே 350 பேர் கடந்த வருடம் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 218 பேர் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மாகாண கல்வித்திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இதில் 45 வயதிற்குட்பட்ட ஐந்து வருட சேவையை உடைய பட்டதாரி ஆசிரியர்களும், எட்டு வருட சேவையை பூர்த்தி செய்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதேவேளை, விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## உள்ளூராட்சித் தேர்தலில்,

## ஐ. தே.முவைத்தோற்கடிக்க

## ஜனாதிபதி பிரயத்தனம்

(கொழும்பு)

நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ம.வி.முன்னணியுடன் கூட்டணியமைத்துப் போட்டியிடும் நோக்கில் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி ம.வி.மு. தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

ஐ.தே. முன்னணியை தோற்கடிப்பதற்கான நடைமுறை ஒழுங்குகள் பற்றியதாகவே இப் பேச்சுக்கள் அமைந்தன என்று பொ.ஐ.மு வட்டாரங்கள் தெரிவித்தன.

இறுதியான முடிவுகள் எதுவும் இப் பேச்சில் எடுக்கப்படவில்லையாயினும், பேச்சுக்கள் திருப்திகரமாக நடைபெற்றதாகவும் இரு தரப்புக்களினதும் முக்கியஸ்தர்கள் வருகிற வாரம் மீண்டும் சந்தித்து இறுதி முடிவுகளை எடுப்பர் எனவும் தெரிய வருகிறது.

பேச்சுக்களில் பொ.ஐ.மு. சார்பில் ஜனாதிபதி குமாரதுங்கவுடன் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபாலசிறிசேன; முன்னாள் அமைச்சர்மங்கள சமரவீரஆகியோர்பங்குபற்றினர்.

(உ)

## அரசியல் ரீதியான

## பழிவாங்கல்களுக்கு

## ஒருபோதும் இடமளியோம்

### பாதுகாப்பு அமைச்சர் உறுதி

(கொழும்பு)

அரசியல் ரீதியிலான பழிவாங்கல்களுக்கு இடமளியாது சுய விருப்பத்தின் அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பொது ஜன ஐக்கிய முன்னணி பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தொழிற்சங்கத் தலைவரும் முன்னாள்அமைச்சருமான அலவி மௌலானா கடந்த வாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களான அரசாங்க உத்தியோகத்தர்களும், வேறு பணியாளர்களும் தம் அலுவலகங்களுக்கும் வேலைத் தளங்களுக்கும் செல்ல முடியாதவாறு அடாவடித்தனங்களால் தம்மை அச்சுறுத்தி வருவதாக முறைப்பாடு செய்துள்ளமை தெரிந்ததே.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் எதிர்க்கட்சித்தலைவர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் திலக் மாரப்பன தலைமையில் நியமிக்கப்பட்ட கூட்டுக்குழுக்கூட்டத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கயில், பொதுத்தேர்தலின் பின் தமது கடமைக்கு செல்ல விடாது அடாவடித்தனங்களுக்கு உள்ளானவர்கள் எவ்வித இடையூறுமின்றி கடமைக்கு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும்,

தமது அலுவலகங்களுக்கு செல்ல முடியாதவர்களுக்கு அவர்களின் வீடுகளிலிருந்து மிக அண்மையிலுள்ள அலுவலகங்களுக்குசெல்வதற்கான மாற்றங்கள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

### கால்கள் இரண்டுமில்லா நபர்

## வாழ்வில் விரக்தியடைந்து

## ரயிலில் தலைவைத்து சாவு

(கொழும்பு)

இரண்டு கால்களையும் இழந்து, வாழ வழியின்றி தவித்த நபர், கோட்டை ரயில் தண்டவாளத்தில் தலையை வைத்துதற்கொலை செய்துள்ளார்.

இரண்டு கால்களையும் இழந்துபிளாஸ்டிக் கால்களுடனும், ஊன்று கோலின் உதவியுடனும் நடமாடி வந்த இவர், கடந்த புதன்கிழமை இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

இவரது தலை மற்றும் உடலின் அரைவாசிப்பகுதி ரயிலில் நசியுண்டு சிதைந்து காணப்படுவதால் இதுவரை இவர் யாரென்று அடையாளம் காணப்படவில்லை.

(உ-7)

## இராசி பலன்

(13-1-2002)

(மார்கழி 29, ஞாயிறு)
அமாவாசை மு.இ 7.16 வரை
பூராடம் பி. ப 2. 16 வரை
ராகுகாலம் 5. 03-6. 33
சுபநேரம் 9. 33-11. 03
சித்தாமிர்தம், அமாவாசை விரதம்

**மேடம்**

தர்மம், உடல் உழைப்பு, வயிற்றுக் கோளாறு, தொழில் திருப்பம்.

**இடபம்**

பிரயாண பயம், முயற்சி தாமதம், வீண் தொல்லை, போசனசுகம்.

**மிதுனம்**

அபூர்வ சந்திப்பு, கௌரவம், வாகனவசதி, காரியம் கைகூடும்.

**கடகம்**

தொழில் முன்னேற்றம், நோய் குணமடைதல், காரிய நன்மை, தனவரவு.

**சிங்கம்**

உடல் சோர்வு, தொழில் சிறப்பு, செல்வாக்கு குறைவு, முயற்சி தாமதம்.

**கன்னி**

தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், உறவினர் மனஸ்தாபம், ரோகம்.

**துலாம்**

கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி,

**விருச்சிகம்**

தனவிரயம், மாதர் நட்பு, சென்ற இடத்தில் செல்வாக்கு குறைவு, காரிய பங்கம்.

**தனுசு**

புதிய பொருள் சேர்க்கை, ஜனவசியம், சயன சுகம், அதிக பிரயாசை.

**மகரம்**

அமைதிக் குறைவு, உறவினர் மனஸ்தாபம், பிரயாணம், காரிய தாமதம்.

**கும்பம்**

தனலாபம், தொழில், சிந்தை, உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம்.

**மீனம்**

காரிய நன்மை, அதிகாரம் கடின முயற்சி, கீழ்ப்படிவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

**வளவன்**

## எழுது பொருள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்·உரும்பிராய்சந்திரோதய வித்தியாசாலையில் கல்வி கற்கும் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையம் மற்றும் பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி க.ஈஸ்வரி ஆகியோரின் அன்பளிப்பாக எழுது பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டதாக அதிபர் க.ஆனந்தராசா தெரிவித்தார். (உ)

## இன்று ஒரு தகவல்

# இன்பமும்துன்பமும்அதுவே

நள்ளிரவு நேரத்தில் மூன்று குதிரை வீரர்கள் பாலைவனம் வழியாகச் சென்றுகொண்டிருந்தார்கள். அந்த இருளில் திடீரென்று எங்கிருந்தோ 'நில்லுங்கள்' என்று குரல் கேட்டது. மூவரும் குதிரையை நிறுத்தினார்கள். 'கீழே கூழாங்கற்கள் கிடக்கின்றன. ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று அந்தக்குரல் மீண்டும் ஒலித்தது. குதிரையை விட்டு இறங்கிய மூவரும் ஆளுக்கு ஒன்றிரண்டு கற்களை எடுத்துத் தங்கள் பைக்குள் போட்டுக் கொண்டனர். 'இப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்களோ அதற்காக மகிழ்ச்சி அடையவும் போகிறீர்கள், வருந்தவும் போகிறீர்கள். இனி நீங்கள் பயணத்தைத் தொடரலாம் என்று' அந்தக்குரல் சொல்லியது. மூவரும் குதிரையில் அமர்ந்து புறப்பட்டனர். நீண்டதூரம் பயணம்செய்தபிறகு பொழுது புலரத் தொடங்கியது. நள்ளிரவில் தாங்கள் எடுத்த கற்களை ஒளியில்அவர்கள் பார்த்தனர். என்ன வியப்பு ஒவ்வொரு கல்லும் விலை மதிப்பற்ற இரத்தினக் கல்லாக இருந்தது.

இதைப் பார்த்ததும் அவர்கள் 'ஐயோ! இன்னும் சில கற்களை எடுத்துவராமல் போய் விட்டோமே என்று வருத்தம் கொண்டார்கள். அதேசமயம் இந்த இரத்தினக் கற்களாவது கிடைத்ததே என்று மகிழ்ச்சியும் அடைந்தனர். □

பேராசிரியர் எ. சோதி

## மரவேலைப் பயிற்சி
# போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(மானிப்பாய்)

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலருடாக ஸ்ரீ லங்கா தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் மரவேலைப் பயிற்சி போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை கல்வித்தகைமை, தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்ற சான்றிதழ், தொழில் அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டுஇம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்குமாறு ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகாரசபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாக, சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதன் பொறுப்பதிகாரிவே.ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார். (உ-120)

## காரைநகருக்குவெளியே
# விறகு எடுத்துச் செல்ல கடற்படையினர் தடை

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் இருந்து, வெளியிடங்களுக்கு விறகுகள் எடுத்துச் செல்ல அங்கு நிலை கொண்டுள்ள கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

இத் தடை, கடந்த வெள்ளி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை, கடந்த காலங்களில் காரைநகர்ப் பகுதியில் இருந்த பெருமளவு பயன்தரு மரங்கள் விறகுக்காக தறித்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-238)

# ஆலயத்தில் திருடியோர் பிணையில் செல்லஅனுமதி

(மந்திகை)

நுணாவில் மேற்குவீரபத்திரர் கோவில் உடைமைகளைத் திருடிய மூவரை சாவகச்சேரி நீதிமன்றம்பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி ஆலய உடைமைகளைத் திருடிய சம்பவம் தொடர்பாக, கொடிகாமம் பொலிஸார் மூவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை கடந்த வியாழனன்று இடம் பெற்றபோது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் தலா2 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 5ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்லவும்பெருவிரல் அடையாளங்களைப் பதியவும்நீதிபதி உத்தரவிட்டார். (உ-23(

# ஈ.பி.டி.பி உறுப்பினர் படுகாயம்

(மந்திகை)

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் எதிரே வந்த இரு சில்லு உழவு இயந்திரத்துக்கு வழிவிட்டுக் கொடுக்க முயன்றவேளை மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று மாலை வல்வெட்டித்துறை ஆலடிச் சந்தையில் நடைபெற்ற இந்தச்சம்பவத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினரான ஊர்காவற்றுறையைச்சேர்ந்த இராசையா பரமேஸ்வரன் (வயது-29) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (உ-23)

# விழிப்புக்குழு அமைப்பு

(நவாலி)

நவாலி வடக்கு-புலவர்வீதியில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதையடுத்து அங்கு விழிப்புக்குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. (உ-228)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர் கோரிக்கை

(கோப்பய்)

ஆரம்ப பாடசாலைகளின் பதிலதிபர்கள் நியமனங்களை பொறுத்தவரையில் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்விஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கக் கல்வித் திணைக்களமும் ஆசிரியர் சங்கங்களும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ79)

## சிறுவர் பாதுகாப்பு நிதிய ஏற்பாட்டில்
# யாழில் முதல் முறையாக சிறுவர் பாராளுமன்றம் இம்மாதம் 26 இல்

(தென்மராட்சி)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக மாவட்ட சிறுவர் பாராளுமன்றம் இம்மாதம் 26ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பாராளுமன்றநிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள சிறுவர் கழகங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டு மாவட்டத்தில் சிறுவர் எதிர்நோக்கி வரும்பிரச்சினைகள் பற்றியும் தமது தேவைகள் பற்றியும் எடுத்துரைக்கவுள்ளனர்.

இப்பாராளுமன்றஅமர்வின் போது யாழ்.மாவட்ட அரச அதிபர்,மேலதிக அரச அதிபர்,பிரதேச செயலர்கள், கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் பார்வையாளர்களாக அழைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சிறுவர் பாராளுமன்றத்தில் பங்கேற்க யாழ்ப்பாணச் சிறுவர்களும் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## போட்டிகளில் வெற்றியீட்டிய
# சிறார்களுக்கு பரிசில் வழங்கல் 26 ஆம் திகதி

(தென்மராட்சி)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் மாவட்ட ரீதியில் நடத்தப்படும் பல்வேறு போட்டிகளுக்கான பரிசில் வழங்கல் வைபவம் எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் சிறுவர்களினால் வரையப்பட்ட சித்திரங்களின் கண்காட்சி, மற்றும் சிறுவர் உரிமைப் பாடல்கள் கொண்ட ஒலிநாடா வெளியீடுஎன்பன இடம்பெறும் என நிறுவனத்தின்சிறுவர் உரிமைகள்திட்ட இணைப்பாளர் ஜெ.தற்பரன் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் உயர் அதிகாரி கிளென் பேட்டிளென், மாவட்ட இணைப்பாளர் எமர்கிரஞ்சில் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (உ-77)

## மோசடி நபர் மடக்கிப்பிடிப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் கிழக்குப் பகுதியில், நீண்டகாலமாக பொதுமக்களைப் பயமுறுத்தி பணம் பறித்து வந்த நபர் அண்மையில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (உ-ப-10)

# வல்லை மயானப் பகுதியில் துர்நாற்றம்வீசுவதாக புகார்

(நவக்கிரி)

அச்சுவேலி வல்லைப் பகுதி மயானப்பகுதியில்துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடுகளின் எச்சங்களை கண்டபாட்டில் இப் பகுதியில் வீசுவதாலேயே இவ்வாறு துர்நாற்றம் வீசுகின்றது எனவும்,

இதனால் இறுதிக்கிரியைகளை ஆற்றச் செல்லும் மக்கள் பெரிதும் சிரமமுறுவதாகவும் கூறப்படுகிறது. (உ-233)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின், கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் இன்று காலை 7.00 மணிக்கு 'வலம்புரி' பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையுடன் திருவாசகமுற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. (செ)

## யாழ்ப்பாணத்தில்
# பனை அபிவிருத்தி சபைக்கு நிரந்தர கட்டடம்

(வட்டுக்கோட்டை)

பனை அபிவிருத்திச் சபையின் 8 வது தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பொ. சிவபாதம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு நகர அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகக் கையேற்கவுள்ளார். இதேவேளை, பனை அபிவிருத்திச் சபைக்கு யாழ். நகரில் நிரந்தர கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இணக்கம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-216)

## துரையப்பா விளையாட்டரங்கில்
# படை வீரர்கள் போர் ஒத்திகை

(ஈச்சமோட்டை)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் முன் உள்ள மைதானப்பகுதியில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மதியம் 1 மணிவரை 50இற்கும் மேற்பட்ட இராணுவத்தினருக்கு ஆயுதங்கள தாங்கிய வண்ணம் முன்னோக்கி செல்வதற்கான தற்காப்பு பயிற்சி வழங்கப் பட்டதைக் காண முடிகிறது.

இதைக் கண்ணுற்ற மக்கள் மத்தியில் அச்சம் பரவியதுடன், இது போருக்கானஒத்திகையா அல்லது அமைச்சர் வருகையின் பாதுகாப்பு முன் ஏற்பாடா எனவும் ஒருவருக்கு ஒருவர் கேள்வி எழுப்பியமையையும் அவதானிக்க முடிந்தது. (உ-59)

# சாரதி படுகாயம்

(மந்திகை)

பாரத்துடன் வேகமாகச் சென்ற இரு சில்லு உழவு இயந்திரம்,கட்டுப்பாட்டை இழந்ததில் அதன் சாரதி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

அல்வாய்மேற்கைச் சேர்ந்த கந்தசாமி உதயகுமார்(வயது 19)என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். (உ-23)

# விசேடவகுப்பு

(யாழ்ப்பாணம)

திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலன சித்திரம்' நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையினால் நடத்தப்பட்டு வரும்இலவச திரைப்படத் தொழில்நுட்ப கற்கை நெறியின் விசேட வகுப்பு இன்று காலை 9.30 மணி முதல் நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் நடைபெறவுளளது.

திரைப்பட தொழில் நுட்பத்தை அறிய ஆவலாக உள்ள அனைவரும் இந்த வகுப்பில் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-106)

# இறால் கொள்வனவு

(ஊர்காவற்றுறை)

தம்பாட்டி கடற்றொழிலாளர்களினல் பிடிக்கப் படும் இறாலினை,தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுக் சங்கம் கொள்வனவு செய்து வருகின்றது. (உ-75)

## திருவாசகம் முற்றோதல்

(தும்பளை)

தும்பளை ஸ்ரீவீரமாகாளி அம்பிகை ஆலயத்தில்இன்று காலை 6.00மணி முதல் சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக. சோமஸ்கந்த ராஜக் குருக்கள்தலைமையில் திருவாசக முற்றோதல் மற்றும் திருவாசகம் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள் என்பன இடம் பெறவுள்ளன. (உ-245)

## சிந்தனைக்கு விருந்து

### இதழ்கள் ஆற்றும் பணி!

பல்கலை தேர்கழகம பல்காலும் ஆராய்ந்தே
ஒல்லும் எனஒருவர்க் கீந்தபட்டம் - எல்லவரும்
போற்றத் தமக்கஃது போதாதென் றார்க்கிதழ்கள்
ஆற்றும் பணியே பணி!

'பழையவன்'

ஒல்லும்-பொருந்தும்

## பர்மாவில் அணு நிலையம்

(ரங்கூன்)

பர்மா, அணு நிலையமொன்றை உருவாக்கவுள்ளதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் பினோவ் தெரிவித்துள்ளார்.

மருத்துவப்பயன்பாட்டிற்கும்மற்றும் அணுசக்திஆராய்ச்சிகளுக்காகவுமே அணு நிலையமொன்று அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

200 ற்கும் அதிகமான பர்மியர்கள், அணு தொடர்பான பயிற்சியை ரஷ்யாவில் பெற்றுள்ளதுடன்பர்மாவுக்கு அணு உலையைவழங்கரஷ்யா திட்டமிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

### இந்திய ராஜஸ்தான் மாநிலத்தில்

# ஆயுத நகர்த்தலின் போது களஞ்சியத்தில் வெடிவிபத்து;யுத்த தளபாடங்கள் பல இழப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஆயுதக் களஞ்சியமொன்றில்ஏற்பட்ட வெடி விபத்தில் ஆயிரக்கணக்கான தொன் வெடி பொருட்களும் 60 இற்கும் மேற்பட்ட இராணுவ வாகனங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று முன்தினம் ராஜஸ்தானின் உதாஷர்என்றஇடத்திலுள்ள ஆயுதக் களஞ்சியமொன்றிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு ஆயுதங்களை கொண்டுசெல்வதற்காக வாகனங்களில் ஏற்றிக் கொண்டிருந்த சமயமே இந்தவிபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் 2 பொதுமக்கள் பலியானதுடன் மேலும் 12 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிவிபத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புக் குறித்து தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

வெடிவிபத்து நிகழ்ந்த இடத்தை இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

வெடிவிபத்தினால் அங்கு ஏற்பட்ட பெருந்தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து நிகழ்ந்த இடத்திற்கு வைத்திய சாலைகளில் இருந்து உடனடியாக டாக்டர்கள் பலர் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வாகனங்கள் மூலம் வெடி பொருட்களை ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்லும் பணி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும்,

ஆயுதக் கிடங்கில் ரொக்கட் ஏவுகணைகளும் விமானக் குண்டுகளும் இருந்ததாகவும் அங்கும் தீ பரவியதால் பாரிய வெடிச் சத்தத்துடன் குண்டுகள் வெடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஆயுதக் களஞ்சியத்தைச் சூழவுள்ள 6 சதுர கிலோமீற்றர் பரப்பளவான பகுதியில் இருந்து 3 ஆயிரத்திற்கு அதிகமான பொதுமக்கள் வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்து நிகழ்ந்தமைக்கான உண்மையான காரணத்தைக் கண்டறியும் முகமாக புலன் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதுடன்,

விபத்து நிகழ்ந்த சமயம் இராணுவவீரர்கள் சிலர் துரிதமாக செயற்பட்டதன் காரணமாக நூற்றுக்கணக்கான வாகனங்கள் பேரழிவில் இருந்து தப்பிப்பிழைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாகிஸ்தான் மீதான தாக்குதலுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே இந்த ஆயுத நகர்த்தல் இடம் பெற்றதாகவும் தெற்காசியப்பிராந்தியத்தில் நம்பப்படுகிறது. (உ-5)

# உலக தரிசனம்

## அமெரிக்கா மீதான தாக்குதலில் 250 இந்தியர்கள் இறப்பு

(புதுடில்லி)

அமெரிக்காவில் கடந்த செப்ரெம்பர் 11 ஆம் திகதி இடம் பெற்ற உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதான தாக்குதலில் 250 இந்தியர்கள் உயிரிழந்ததாக அறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்ட இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி அந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். (உ-5)

### தீவிரவாதிகளை கைதுசெய்ய

## பாகிஸ்தானுக்கு இந்தியா அவகாசம்வழங்க வேண்டும்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் தீவிரவாதிகளை கைது செய்வதற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஸ் முஷராப்பிற்கு போதிய கால அவகாசம் வழங்க இந்தியா முன்வரவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்துடன், பாகிஸ்தான் அதிபர் இது தொடர்பாக ஆற்றவிருக்கும் உரையின் மூலம் தமக்கு சாதகமான கருத்துக்கள் முன்வைக்கப்படும் என்பதை இந்தியா எதிர்பார்க்கக்கூடாதெனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

காஷ்மீர் யுத்தம்நினைத்துப் பார்க்க முடியாதளவு பாரிய சேதத்தை விளைவிக்க கூடியது.எனவே இரு நாடுகளுக்கும் இடையில் வலுப் பெற்று வரும் முறுகலுக்கு இராஜதந்திர மற்றும் அரசியல் மட்டத்தில் தீர்வுகண்டு பிராந்தியத்தில் தோன்றியுள்ளசமாதானசீர்குலைவிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் கேட்டுள்ளார். (உ-7)

## இந்திய- பாக். நாடுகளுக்கு ரஷ்யா எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்திய- பாகிஸ்தான் இரு நாடுகளுக்கிடையே தற்போது ஏற்பட்டு வரும் பதற்றசூழ்நிலை காரணமாக ரஷ்யா இரு நாடுகளையும் எச்சரித்துள்ளது.

இவ்விருநாடுகளும் நேரடியான யுத்த களத்தில் இறங்குமானால் பாரியளவு உயிர்ச்சேதம், பொருட்சேதம் என்பன ஏற்படும் என ரஷ்ய வெளி விவகார அமைச்சர் ஈகோ எப்ரோப் தெரிவித்துள்ளார்.

இவ்விரு நாடுகளுக்கு மிடையே உள்ள பதற்ற சூழ்நிலைகளைதணித்து அரசியல் ரீதியான தீர்வு ஒன்றை காணும் பொருட்டுரஷ்யாவும் ஏனையசில நாடுகளும் தம்மாலான உதவிகளையும், செயற்பாடுகளையும் செய்து வருகின்றனஎனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# விளையாட்டு செய்திகள்

## உலகக் கிண்ண கிரிக்கெட் ஆரம்பம்

(வெலிங்டன்)

19 வயதிற்கு கீழ்ப்பட்டோருக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இம் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை நியூசிலாந்தில் நடைபெற்றுவருகின்றன.

அப் போட்டித் தொடரில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கு சம்மிக நிரோஷன் தலைமை தாங்குகின்றார். (உ-10)

## உலகக் கிண்ண கொக்கிப் போட்டி வெற்றி இந்தியாவுக்கே!

(கோலாலம்பூர்)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 9 ஆம் திகதி வரை மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் உலகக் கிண்ண ஹொக்கி போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள இந்திய அணி, உலகக் கோப்பையை கைப்பற்றும் என்ற பலத்த எதிர்பார்ப்புடன் சென்னையில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய ஹொக்கி அணி வெற்றிகளை குவித்து வருவதால் உலகக் கிண்ணப் போட்டியிலும் வெற்றி வாகை சூடும்என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-10)

## ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் சார்ஜாவில்

(சார்ஜா)

மேற்கிந்திய தீவுகள் அணியுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளை சார்ஜாவில் நடத்த பாகிஸ்தான் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தான் மேற்கிந்திய தீவுகள் அணி ஆகியன இம் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் மூன்று டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொள்ளவிருந்தன.

பாகிஸ்தான், இந்திய நாடுகளுக்கிடையிலான முறுகல் நிலை காரணமாக மேற்கிந்திய அணி பாகிஸ்தான் வர தயங்கியதையடுத்து கைவிடப்படும் நிலையில் இருந்த இப் போட்டி மேற்கிந்திய தீவுகள் அணியின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன், பாகிஸ்தான் கட்டுப்பாட்டுச் சபை கலந்தாலோசித்த பின்பே இப் போட்டிகளை சார்ஜாவில் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## ஆயுதங்களை கடத்த முயன்ற மூவர் கைது?

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் படையினரால் கடந்த வாரம் கைப்பற்றப்பட்ட கப்பல் மூலம், ஆயுதங்களைக் கடத்த முற்பட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பேரை பலஸ்தீன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆயுதக் கடத்தலில் தொடர்புடையவர்களை விரைவில் கைது செய்ய வேண்டும் என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் கொடுத்த தீவிர அழுத்தத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை,

இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனத்திற்குள் ஊடுருவி, பலஸ்தீன காஸாப்பகுதி குடியிருப்புக்களையும் விமான நிலைய ஓடு பாதைகளையும் புல்டோசர் மூலம் சேதமாக்கியுள்ளனர்.

இதனால், மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் அமைதி நிலை ஏற்படுத்த அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகள் பாதிப்படையும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## அமெரிக்க விமானங்களில் விமானிகளின் அறைக்கு விசேட கதவுகள்

(வாஷிங்டன்)

அமெரிக்க விமானங்களின் விமானிகளின் அறைக்கு விசேட கதவுகள் பொருத்தப்பட வேண்டும் என்றுஉள்ளூர் விமானப்போக்குவரத்துமுகாமைத்துவம் உத்தரவிட்டுள்ளது.

விமானங்களின் அறைக்குள் சந்தேக நபர்கள் ஊடுருவுவது மற்றும் ஆயுதங்கள் வெடி குண்டுகள் போன்றவற்றை கொண்டு செல்வதுபோன்ற நடவடிக்கைகளால் ஏற்படும் ஆபத்துக்களை தடுக்கவே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் விமானி அவசர அவசரமாகவெளியேறவும்உள் வரவும் இக்கதவு உதவும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அமெரிக்காவின் 6ஆயிரம்விமானங்களுக்குஇவ் விசேட கதவு அமைக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. (உ-7)

### வட அயர்லாந்தில்

## மதக்கலவரம்

(பெல்பாஸ்ட்)

வட அயர்லாந்தின் தலைநகர் பெல்பார்ஸ்ட்டில் றோமன் கத்தோலிக்கமதத்தினருக்கும் புரட்டஸ் தாந்து மதத்தினருக்கும் இடையே மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன.

கடந்த புதன் கிழமை ஆரம்பமான இம் மோதல்களில் கலகம் அடக்கச் சென்ற 14 பொலிஸாரும் மற்றும் 4 பொது மக்களும் படுகாயமடைந்துள்ளனர்.

ரோமன்கத்தோலிக்கபுனித சிலுவை ஆரம்பமகளிர் கல்லூரிக்கு அருகில் ஆரம்பமான மோதல்களில் இரு மதத்தவரும் செங்கட்டிகள், போத்தல்கள், பட்டாசுகள் போன்றவற்றை பயன்படுத்தியுள்ளனர்.

சென்ற வருடமும் இதே கல்லூரிக்கு அருகில் ஏற்பட்ட இதேபோன்றகலவரத்தினால் பலர் பலியாகியமை தெரிந்ததே.

இதேவேளை, இப்பகுதியில் ரோந்து சென்ற பொலிஸ் வாகனம் மீதும் பெற்றோல் குண்டுத்தாக்குதல்இடம்பெற்றதால் வாகனம் முற்றாக சேதமடைந்துள்ளது. (உ-7)

## சந்தை திறப்பு

(நவக்கிரி)

அண்மையில் கலைக்கதிர் சனசமூக நிலைய அனுசரணையுடன் புனரமைக்கப்பட்ட வளலாய்ச் சந்தை தைப்பொங்கல் தினமான நாளை திறந்துவைக்கப்படவுள்ளது.

நிலையத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. (உ-233)

பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள்
எல்லாந்தலை
குறள்

# வலம்புரி

## பூனைகளின் தோழர்கள்

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியில் அன்றாடப் பிரச்சினைகள் திரும். பாதைகள் திறக்கப்படும், சொந்த மண்ணில் மீளக் குடியமர முடியும்என எதிர்பார்த்த தமிழ் மக்களுக்கு வழமை போல்ஏமாற்றமேகிடைத்தது.

ஏதோஎல்லாம்நடப்பது போல் மாயைத் தோற்றம் காட்டப்படுகிறதே யொழிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் புதிய அரசு மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

கட்டுப்பாட்டுவிலைக்கு விற்கப்பட்ட மண்ணெண்ணை இப்போது 65ரூபாவைத் தாண்டிவிட்டது. ஏனைய அத்தியாவசிய பொருட்களின் விலை பல மடங்கு உயர்வு கண்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள நீதியற்ற வர்த்தகர்கள் சிலர் கண்மூடித்தனமாக நடந்து கொள்கின்றனர். இதற்கு உயரதிகாரிகள் உடந்தை என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

சேர்க்கவேண்டியநேரத்தில் சேர்ப்போம் என்பது போல் குறிப்பிட்ட சில வர்த்தகர்களும் உயர் மட்ட அதிகாரிகளும் நடந்து கொள்கின்றனர். அத்தியாவசியப் பொருட்களின்விலைகளைக்கண்டபாட்டில் உயர்த்தி ஏழைகளின் வயிற்றில் அடிப்பதும் அதற்கு உடந்தையாக இருப்பதும் தேசத்துரோகமாகவே கருதப்படும்.

கட்டுப்பாட்டு விலைகளை மீறி விற்பதை தடுப்பதற்காக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்ட போதிலும் எடுக்கின்ற சம்பளத்தின் அரைப்பகுதிக்காவது அவர்கள் கடமையாற்றுகிறார்களா என்பது கேள்விக்குரியது.

பாலுக்குக் காவலாக இருக்க வேண்டியவர்கள் பூனைக்கு உற்ற தோழர்களாக இருந்தால் நாட்டில் எதெது நடக்கக் கூடாதோ அவையெல்லாம் நடந்தே தீரும். இவற்றை தடுக்க சட்ட நடவடிக்கைகளும்மிகமிக அவசியமாகும். அவ்வகையில் சட்டவிரோதமாக விலையைக் கூட்டி விற்பவர்களை கைது செய்யுமாறு யாழ். நீதிபதி இ.த. விக்கினராஜா விடுத்த உத்தரவு ஏழைகளின் வயிற்றில் பாலை வார்த்துள்ளது.

நீதிபதியின் உத்தரவை நிறைவேற்ற பொதுமக்களும் உதவுவது அவசியம்.

### பரமபிதா காட்டிய பாதை

# இயேசுக்கிறிஸ்துவின் ஒளியினில் வழிநடந்து

# இறைவனை அறிந்து அருள்வாழ்வு பெறுவோம்



வானகத் தந்தையின் பூரணத்துவ அன்பின் வெளிப்பாடாக ஆறறிவுள்ள அழியாத ஆன்மாவைக்கொண்ட மனிதன் இறைவனின்சாயலாகப டைக்கப்பட்டான் அலகையின் சூழ்ச்சியால் தன்னிலை மறந்த மனிதன் பாவத்திற்கு அடிமையாகி இறைவனின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்து ஓரங்கட்டப்பட்டான் பாவத்தின் அடிமைத்தனத்திலும் இறைவனின் அருள் உயிரை இழந்து இறை பராமரிப்பு அற்ற நிலையிலும் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனுக்குஅருள் வாழ்வைக் கொடுக்கவும்உடைந்து போன இறை மனித உறவைப் புதுப்பிக்கவும் தன்னுடைய ஒரே மகனைஇவ்வுலகுக்கு அனுப்புகின்றார்இறைவன் ஆதியிலே வார்த்தையாக இருந்தவர் தன் அன்புமக்களை மீட்பதற்காக மனுவுருஎடுக்கின்றார்.

## இ. அலெக்ஸ் அமலரட்ணம்

### மெசியாவை எதிர் பார்த்தவர்கள்

காலங் காலமாக மெசியாவை எதிர் பார்த்திருந்த மக்கள் அவரைக்காணவேண்டும் என்று ஆவலாக இருந்தார்கள் மாளிகையில் பிறந்து உலகை ஆளும் மன்னனாக வலம் வருவார்என்றும்தமக்கு மகிழ்வு நிறைந்த வாழ்வைத் தருவார் என்றும் கனவு கண்டார்கள். ஆனால்இவர்களின் எதிர் பார்ப்புக்கு மாறாக எளிமையிலும் ஏழ்மையிலும் மாடடைக் குடிலில் இறைமகன் பிறக்கின்றார் வான தூதர்கள் இறை புகழ் பாட முதன் முதலில் இடையருக்கு மீட்பரின் பிறப்பு அறிவிக்கப்படுகின்றது.

வானில்அதிசயவிண்மீனைக் கண்டு அதன் மூலம்மீட்பராம் யேசுவின் பிறப்பை உணர்ந்து கீழ்த்திசை ஞானிகள் மூவர் பல இடர்களுக்கு மத்தியில் பயணித்து மெசியாவைக் கண்டதோடு மட்டுமல்லாமல் பொன்னும் தூபமும் வெள்ளைப் போளமும் காணிக்கை கொடுத்து பணிந்து எழுகின்றார்கள இதையே எமதுதிருச்சபை 'திருக்காட்சிவிழா'வாக கொண்டாடுகின்றது.

### நற்செய்தி வாசகம்

பபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட ஜெருசலேமில் ஆண்டவரின் மாட்சிமை ஒளியாக உதித்தது.

இதனால் மக்கள்மகிழ்ந்திருக்க இறைவாக்கினர் இசையால் முதல் வாசகம்(60:1-6) ஊடாக உற்சாகமளிக்கின்றார். கிறிஸ்துவின் மீட்பு உலகில் வாழும் எல்லா மக்களுக்கும், உரித்தானது என்றும் அந்த மீட்பின் நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிப்பது நமது கடமைஎன இரண்டாம் வாசகம்(எபே: 3: 2,3-5, 6) ஊடாக எடுத்துக் கூறுகின்றார். தூயபவுல், துன்பங்கள் துயரங்கள் இடர்கள்மத்தியிலும் தமது பயணத்தை தொடர்ந்தஞானிகள், பாலகன்யேசுவைபணிந்துதொழுவதையும், எமது விசுவாசப் பயணத்தில் இயேசுவின் ஒளி எமக்கு வழிகாட்டுவதையும், நற்செய்தி வாசகம் (மத் 2:1-12) விளக்குகின்றது.

### கிறிஸ்துவின் ஒளி

அன்று மெசியாவைக் காண வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஏமாற்றத்தைக்கொடுத்து, புறவினத்தாருக்கு தம்மை இனங்காட்டி வெளிப்படுத்திய இறைவன் இன்றும்எமக்கு தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். எமது சமூகத்திலே வாழுகின்ற ஒதுக்கப்பட்டவர் மத்தியிலே அவருடைய

''திருக்காட்சி'' எமக்காகக் காத்திருக்கின்றது. இதைநாம் உணர்ந்து கொள்கின்றோமோ? கிறிஸ்துவின் ஒளியைப் பின்பற்றி வழிநடந்து அவருடைய தரிசனத்தைக் காண நாம் விழைகின்றோமோ?

துன்பங்கள் துயர்கள் இடர்கள் மத்தியிலே விசுவாசத்தோடு நாம் வழிநடத்தவும் கிறிஸ்துவின் ஒளியிலே நாம் வாழ்ந்து இறைவனை அறிந்து கொள்ளமுயற்சி எடுப்போம்.

இயேசுவுக்கு எம் இதயத்திலே இடம் கொடுத்து, அவரைஎம் முழு இதயத்தோடும் பணிந்து தொழுவோம்.

## தினசரி தியானம்

## அருள் தாகம்

கர்மமானது கோடி முன்னே செய்தாலும்
நின்கருணைப் பிரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ!

**-தாயுமானவர்**

அற்பப் பொருளுக்காகத் தாகம்கொண்டுள்ள என் மனதில், அருள் தாகம் கொள்ளும்படி அண்ணலே, நீ அருள் புரிவாயாக.

இன்று இருந்து நாளைக்கு அழிந்துபோம் பொருளுக்காக மனிதன் படும்பாடு எவ்வளவு பெரியது! ஊர் ஊராக அலைந்து திரிதல் ஓயாது உழைத்தல் ஆகிய இத்தனை வித இயக்கமும் பொருளல்லாப் பொருளை நாடியுண்டாகிற தாகத்தாலேயாம். என்றைக்கு அது அருள் தாகமாக மாறுகிறதோ அன்றைக்குப் புதிய வாழ்வு துவங்குகிறது. தாகம் எல்லார்க்குமுண்டு, தாகமில்லாது முன்னேற்றமில்லை. பொருள் தாகம் மனிதனைப் புண்படுத்துகிறது. அருள் தாகம் ஆறுதல் அளிக்கிறது.

**ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்**

## வன்னிக்கு பொருட்களை எடுத்துச் செல்வதில்

### ப. நோ. கூ! சங்கங்கள் முண்டியடிப்பு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்திற்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களுடன் தடைநீக்கப்பட்ட பொருட்களையும் கடந்த 12 ஆண்டுகளின்பின் வன்னிக்கு எடுத்துச் செல்வதற்காக அங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் கொள்வனவு முகாமையாளர்கள் வவுனியாவுக்கு படையெடுத்துள்ளனர்.

தகரத்திலான கூரைத்தகடுகள், அஸ்பெஸ்ரஸ் சீற்வகைகள், தீப்பெட்டி, பால்மா வகைகள், தேங்காய்எண்ணை சைக்கிளுக்கான உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப்புகள் ஆகிய பொருட்களை இவர்கள் கூடுதலாகக் கொள்வனவு செய்வதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். (வ)

## கராத்தே ஒன்றியத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு

யாழ். மாவட்ட கராத்தே ஒன்றியம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ரூபசிங்க தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன் போது ஒன்றியத் தலைவராக சென்சேய் கணேசமூர்த்தி உபதலைவராக சென்சேய் றேமன் சென்சேய்ராஜேந்திரன் செயலாராக சென்சேய் அன்டோடினேஷ் உப செயலாளராகசென் சேய் விஜயபாஸ்கரன் பொருளாளராக சென் சேய் ரஜ்சித்சைலேந்திரகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுடன் 13 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ந)

## உரத்திற்கு தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

வேலணை கமநல சேவை அபிவிருத்தி நிலையத்தில் யூரியா உரத்திற்கே தட்டுப்பாடு எற்பட்டுள்ளது. (உ-75)

## நீத்தார் புகழுரை



உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமான அமரர் ஞானப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் அண்மையில் கொழும்பில் இறைவனடி சேர்ந்தார். இவர்முன்னைநாள் பிரபல பொலிஸ் அதிகாரி டானியேலின்பேரன் திரு. திருமதி ஞானப்பிரகாசத்தின் ஏகபுத்திரன்' இவர் தனது ஆரம்ப உயர்கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் பெற்றுக் கொண்டார் தனதுகல்வியை முடித்துக் கொண்டு இலங்கைபொலிஸ் திணைக்களத்தில்இணைத்துக் கொண்டார்.

ஓர்பொலிஸ் இன்ஸ்பெக்டராக பிரவிவகித்தஇவர் மவுட்லெவனியா பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் அதிகாரியாகவும் பொல்காவெல, குருநாகல், வவுனியா பொலிஸ் நிலைய அதிகாரியாகவும் தொடர்ந்து கொழும்பு பொலிஸ் தலைமை காரியாலய சேம நலப்பிரிவின் அதிகாரியாகவும் பின்னர் யாழ்மண்ணில் 1980-1986 ஆண்டுப் பகுதிகளில் யாழ் பொலிஸ் நிலைய 'குற்ற புலனாய்வுத் துறை' இன் பொறுப்பதிகாரியாகவும் (O.1.C) பணியாற்றியுள்ளார்.

எப்போதும் புன்சிரிப்புடன் வாழும் இவரை எல்லோரும் 'பிள்ளை' என்றுதான்செல்லமாக அழைப்பார் அவரும் தது பெயருக்குஏற்ப அனைவருக்கும் பிள்ளையாகவே வாழ்ந்தார் இவர்தமதுசேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் மக்கள் மீது காட்டிய சேவை ஓய்வு காணவில்லை பல்வேறு சமூக தொண்டர் நிலையங்களில் இருந்து இடம் பெயர்ந்து போரின்தாக்குதல்களுக்கு உள்ளான மக்களுக்கு அவர்களின்விடிவிற்காக தமது ஆற்றல்கள் திறமைகளை இம்மண்ணில் கரைத்துக் கொண்டார் தமது சமூகசமய சேவைகளின் அர்ப்பணத்தில் தமது கனிஷ்ட புத்திரனை இறை பணிக்காக அர்ப்பணித்தார்

இவர் எம்மண்ணை விட்டு நீங்கினாலும் எம்மண்ணின் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார் என்றால் மிகையில்லை.

# கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு இரண்டு மணி நேர அதிகரிப்பு !

(கொழும்பு)

வடக்குக் கிழக்குக் கடற் பிரதேசத்தில் தினமும் காலை 4 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்குவதென உயர்மட்ட மாநாடொன்றில் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது இதற்கு முன்னர் காலை 4 மணி முதல் மாலை 4.30 மணி வரை மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மீன்பிடித் துறை, கடல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த விஜய சேகர தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட மகா நாடொன்றிலேயே மேற்படித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர் மற்றும இராணுவக் கடற்படை விமானப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் மீன்பிடி அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைகளின் அமைப்பதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னர் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த 500மீற்றர் கடல் எல்லை பரப்பு 750 மீற்றர் வரையிலும் 1000 மீற்றர் எல்லை 1500 மிற்றர் வரையிலும் அதிகரிக் கப்பட்டுள்ளது.

இதே வேளை வடக்குக் கிழக்கு மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்யும் எனவும் இதற்கான வர்த்தமானி அறிவிப்பை விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 28ல் பிரதமரின் கொள்கை உரை

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கையும், சமாதானச் செயற்பாடுகளும் பற்றி பிரதமர் ரணில் எதிர்வரும் 22ந் திகதி பாராளுமன்றில் உரையாற்ற உள்ளார். (இ)

## சமாதானத்தை...

என வழங்கிய வாக்குறுதியை நிறை வேற்றுவதே எனது தலையாய பணியாக உள்ளது.

1994 ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது நான் எடுத்த எனது கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றுவேன் என்று சபதம் எடுத்தேன் அதனை இன்று நிறைவேற்றியுள்ளேன்.

அதே போன்று நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்னறை ஏற்படுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதில் நான் முனைப்பாக செயற்படுகிறேன். இனி மேல் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதைத் தவிர யுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை

இந்த நாட்டில் யுத்தத்தின் சத்தங்கள் கேட்கக்கூடாது. கேட்பதற்கு முயற்சிக்கவும் கூடாது. இதனை குழப்பி நாட்டைத் தீ வைக்க எந்த சக்தியாவது முயற்சித்தால்அவர்களை கூண்டோடு அழித்து விடுவேன் என்று விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார.

## அரசு...

அடுத்து இம்முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஐவர் ஹெல்கீசன் தலைமையிலான விசேட தூதுக்குழு கடந்த வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நான்கு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் தலைவர்கள் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி விட்டு நேற்று முன்தினம் மாலை நோர்வே புறப்பட்டுச் சென்றனர்

**பாலாவை 16ந் திகதி**

**தூதுக் குழு சந்திக்கும்**

நோர்வேயின் விசேட தூதுக் குழுவினர் கொழும்பில் பலதரப்பட்ட அரசியல் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பாக லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை எதிர்வரும் 16ந் திகதி புதன்கிழமை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

**நிரந்தர யுத்த நிறுத்த ஒப்பந்தம்**

**காத்மண்டுவில் கைச்சாத்து?**

இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே காத்மண்டுவில் நடைபெறவுள்ள பேச்சவார்த்தையின் போது நிரந்தர யுத்த நிறுத்தம் சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று இருதரப்பாலும் கைச் சாத்திடப்படும் என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது: (வ)

## விலையேற்றத்தை...

இவ் விடயத்தை எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்காது இருப்பது எமக்க வேதனையளிக்கும செயலாக உள்ளது.

கடந்த முறை தேர்தலில் போட்டியிட்டு யாழ் மண்ணிலிருந்து பாராளுமன்றம் சென்ற மக்கள் பிரதிநிதிகள் பெரும்பாலானோர் யாழ் மண்ணில் இல்லாதிருப்பதனாலும், வேறு சிலர் தங்களுடைய வளத்தைப் பெருக்குவதிலேயே குறையாய் இருப்பதனாலும் மக்கள் தங்கள் குறைகளை யாரிடம் சென்று முறையிடுவது. என்று தெரியாமல் வாழ்க்கைச் செலவினை சமாளிக்க முடியாமல் திண்டாடிக்கொணட்டிருக்கிறார்கள்.

எனவே இது விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன் இது விடயத்தில் இன்னும் ஓரிரு தினங்களில் நடவடிக்கை ஏதும் எடுக்காத பட்சத்தில் -

★ *கசல அத்தியாவசிய பொருட்களும் நியாய விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல்*

★ *எரிபொருட்கள் குறிப்பாக மண்ணெண்ணெய் நியாய விலையில் மக்களுக்கு போதுமான வகையில் கிடைக்கப் பெற நடவடிக்கை எடுத்தல்.*

★ *கள்ளச்சந்தை வியாபாரம் தடை செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்*

★ *உடனடியாக இம் மாத உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்*

ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து யாழ் செயலகம் முன்பாக வெகுஜனப் போராட்டம் நடத்தவுள்ளோம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## களஞ்சியத்தில் உள்ள "கோர்ன் சோயா" மா பரிசோதிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக களஞ்சியத்தில் நீண்ட காலமாக இருப்பில் வைக்கப்பட்டிருந்த கோர்ன் சோயா மாப் பைக்கற்றுக்களை பரிசோதனைக்குட்படுத்தி அவை பழுதடையவில்லை என்பதை உறுதிப் படுத்திய பின்னரே குழந்தைகளுக்கு விநியோகிக்க முடியுமென சுகாதாரசேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் (செல்வி) உமா சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் செயலக சமூக சேவைப் பகுதியும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து இந்த மாப்பைக்கற்றை குழந்தைகளுக்கு விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ம)


**இங்கிலாந்துக் கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில்**

**கல்வி வாய்ப்பு**

**தகைமை:-** 01. க.பொ.த (சா/த) ஆங்கிலத்தில் திறமைச்சித்தி (c)
02. வருடாந்தக் கட்டணம் ரூ. 60,0000 முதல் 110,0000 வரை
03. உணவு, தங்கும் வசதி, வேறு செலவுகளைப் பொறுப் பேற்கக் கூடியவாறு (Sponsor) உறுதிப் பத்திரம்
04. க.பொ.த (சா/த) சித்திஅல்லாதவர்களுக்கு தாம் தொழில் புரியும் நிறுவன உரிமையாளரின் சான்றிதழ்

மேற்படி தகைமையுள்ளோர் பல்கலைக்கழகங்களில் அடிப்படைக் கல்வீத் திட்டத்தில் இணையும் வாய்ப்பு உண்டு

அடிப்படை கல்வியின் பின் HNC, HND, BA (Hons) துறைகளில் பயிலலாம்

**Admission with GCE (O/L), GCE(A/L) with 1,2,3 sub jects to one of the 35,000 courses in 78 Universities or 50 Colleges in UK**

**குறிப்பு:-**

க.பொ.த (சா/த) ஆங்கிலத்தில் C அல்லாதவர்கள் சித்திக்கு தகைமையாக **IELTS** அல்லது **TOFEL** எங்களிடம் பயிலலாம்

**கற்பிப்போர்:-** *Mr Louis Paul, BA*
*Mr. K. Padmanathan, B.Com English (London)*

**தொடர்பு கொள்க:-** கே. பத்மநாதன்,
மே/பா, மலையான் வணிக நிறுவனம்,
210, காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

(4214)



**30** ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களிற்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

**வி. எஸ். பி நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏக விநியோகஸ்தரும்

**பரிமளாஸ்ரோர்ஸ்**

26A மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1986)



**இலங்கை வங்கி**

**சாவகச்சேரி கிளை**

**தற்காலிக இட மாற்றம்**

யாழ் நகரில் இயங்கி வந்த சாவகச்சேரி கிளை தற்காலிகமாக வல்லை வீதி, அச்சு வேலியில் அமைந்துள்ள கட்டிடத்தில் 15.01.2002 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் கருமங்களை ஆரம்பிக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

இக் கிளை

**இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் திருமதி க. துரைராசா அவர்களால் திறந்து வைக்கப்படும்**

பிரதேச முகாமையாளர்
இலங்கை வங்கி,
யாழ் பிரதேசம்

(C/3263)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**சித்த மருத்துவகற்கை நெறி**

மேற்படிகற்கை நெறியின் புதிய கல்வி ஆண்டிற்கான சகல விரிவுரைகளும் 16.01.2002 இல் ஆரம்பமாகின்றது.

**பதிவாளர்**

(C/3264)



**கண்ணீர் அஞ்சலி**

மணற்காடு றோ. க. த. க. பாடசாலை

**ஆசிரியர் திரு. சி. கனகலிங்கம்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பூரணம் சிவகுரு**

(காட்டுப்பாதி அல்வாய்)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

இரண்டாம் வருட பட்டப் பின் படிப்பு
கல்வி டிப்ளோமா
ஆசிரிய நண்பர்கள்
(வடமராட்சி)
யாழ் பல்கலைக்கழகம்

(C/3266)



விரைவில் வெளிவருகின்றது !

**ஸாஸ்த்தா – சகஸ்ரம்**

த்ரீஸதி - அஷ்டோத்திரம் அடங்கிய
நூல் (கிரந்தத்தில்)

(4218)



**அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**திருமறைக் கலாமன்றம்**

நடத்தும்

**பொங்கல் கலைப் பொழுது**

*காலம்:– 14. 01. 2002 திங்கட்கிழமை (நாளை)*

*காலையில்:–*

▲ 5.30 - 7.30 மணி - பொங்கலும் வழிபாடும்
▲ 8.30 மணி - பட்டிமன்றம்
பொருள்:- "இன்றைய இளைஞர்களின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு காரணம்; பெற்றோரா? சமூகமா?

*மாலையில்:-*

▲ 5.30 மணி - கருத்தாடல்
பொருள்:- "அமைதியின் தேவை"
(பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்)
▲ 6.15 மணி:- கலைநிகழ்ச்சிகள்
★ நடனம்
★ கவியரங்கம்
பொருள்:- "காயங்கள் ஆறாதோ... "
★ இசைக் கச்சேரி
★ சிறுவர் நாடகம் - ஒன்றாகில் நன்றாகும்

**இடம்- திருமறைக் கலா மன்ற அரங்கு**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

★ நாளை மறுதினம் 15.01.2002 செவ்வாய்க்கிழமை முதல், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இயங்கும் அனைத்து திருமறைக் கலா மன்றங்களினதும் கலை, கலாசாரா அரங்கு சார்ந்த செயற்பாடுகளை இணையத்தில் கண்டு கழிக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

எமது இணைய முகவரி:- www.cpateam.org

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 021- 2393

– திருமறைக் கலாமன்றம்

(C/3265)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.